**விகாரி ஆண்டு மார்கழி 15ம் 31.12.2019ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னிலை.திரு.என். சங்கரன்., பிகாம்,எச்டிசிம்., ஆணையர் மற்றும் தனிஅலுவலர்.**

<table>
<tr><th>நகர்மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற பொருள்கள் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>31.12.2019</td><td>பொருள்.1<br>திருவாரூர் நகராட்சியில் கடந்த மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட பணிகளின் விபரங்களை தொழில் மலர் 2019ல் விளம்பரம் செய்யப்பட்டது .மற்றும் தமிழ்நாடு நகர்புறசாலைகள் அபிவிருத்திதிட்டம் 2019-20ன் தேர்வு செய்யப்பட்டபணிகளை ஒரேசிப்பமாக மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கு உரிய விளம்பரக்கட்டணத்தினை கீழ்கண்டவிளம் பரநிறுவனங்களின் பட்டியல் அடிப்படையில் விளம்பரக்கட்டணத்தினை வழங்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>விளம்பரநிறுவனங்களின்விபரம்</th><th>விளம்பரக்கட்டணத் தொகை</th></tr>
<tr><td>1</td><td>தினமணி-தொழில்மலர் 2019. Express Publications (Madurai) Private Ltd., Nagapattinam.</td><td>ரூ.10500/-</td></tr>
<tr><td>2</td><td>தினபூமி - தொழில்மலர் 2019. ThinaBoomi</td><td>ரூ.9975/-</td></tr>
<tr><td>3</td><td>தீக்கதிர், திருச்சி</td><td>ரூ.9975/-</td></tr>
<tr><td>4</td><td>தினகரன் - தொழில்மலர் 2019. KAL Publications(P) Ltd., Trichy.</td><td>ரூ.18900/-</td></tr>
<tr><td>5</td><td>LAQSHYA MEDIA ltd., Chennai (TURIP Scheme-2019-20. ஒப்பந்தப்புள்ளிகோரியது)</td><td>ரூ.75758/-</td></tr>
</table>
அலுவலககுறிப்பு<br>
1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>
2. மேற்காணும் விளம்பர நிறுவனங்களுக்கான விளம்பர கட்டணத்தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>
ந.க.எண்.1130/2018/இ1</td><td>தீர்மான எண்.129<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td></tr>
<tr><td>31.12.2019</td><td>பொருள்.2<br>திருவாரூர் நகராட்சியில் தூய்மை இந்தியாதிட்டத்தில் 7வது மாநில உயர்மட்ட ஆற்றல் குழுவின் பரிந்துரையின்படி திடக்கழிவு மேலாண்மையின் கீழ்நகராட்சி உரக்கிடங்கில் இருக்கும் குப்பைகளை தரம்பிரித்து உயிரின செரிமான கொள்கலன் மூலம் உரம் தயாரிக்கும் பணிக்கு 28.01.2019ல் பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தற்போது உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளைதரம் பிரித்து உயிரினசெரிமான கொள்கலன் மூலம் உரம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது .மேற்கண்டபணியினை தரஆய்வு செய்து மற்றும் குப்பைகளை தரம்பிரிக்கப்பட்டு வருவது தொடர்பான அண்ணாபல்கலைகழகத்தின் ஆலோசனையுடன் செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.22866/ப்பி3/2018, நாள்.23.08.2018ன் படி சர்வே செய்து உரியசான்றுகள் வழங்குவதற்கு இயக்குநர், அண்ணாபல்கலைகழகம் சென்னை அவர்களிடமிருந்து 25.11.2019 வரப்பெற்ற கடிதத்தில் ஆய்வுக்கட்டணம் ரூ.6,00,000/-மும் மற்றும் அதற்குண்டான சேவைவரி (GST -18%) ரூ.1,08,000/-யும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,08,000/- (ரூபாய்ஏழுஇலட்சத்துஎட்டாயிரம்மட்டும்) செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் தொகையினை செலுத்த உரிய அனுமதியும் மற்றும் வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கு தரஆய்வு மற்றும் சர்வேசெய்வது தொடர்பானபணிகளுக்குரிய</td><td>தீர்மான எண்.130<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td></tr>
</table>

ஆய்வுகட்டணத்தினை வழங்கக்கோரி வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

3. மேற்கண்ட பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் அனுமதி பெற்று தொகையினை வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்டபணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4322/2018/இ1

---

31.12.2019

பொருள்.3

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN50M0259 டிப்பர் வாகனத்தில் மின்கலம் செயலிழந்ததால் வாகனம் இயக்க முடியாமல் இருந்ததால் பணிகளின் அவசர அவசியம் கருதி புதியதாகமின்கலம் ஒன்று சப்ளை செய்திடவிலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின்பெயர் | மின்கலம் விலைவிபரம் |
|---|---|---|
| 1 | A.K.பேட்டரிசேல்ஸ் & சர்வீஸ் 6ML ரமேஷ் காம்ப்ளக்ஸ் மன்னை மெயின்ரோடு சிங்களாசேரி விளமல் திருவாரூர் | ரூ.13500/- |
| 2 | Day Night Marketing சேல்ஸ் & சர்வீஸ் 173C நேதாஜி ரோடு திருவாரூர் | ரூ.13500/- |
| 3 | ஜெய் இன்வெட்டர் 154ஏ நேதாஜி ரோடு ஆர்ச் அருகில் திருவாரூர் | ரூ.13800/- |

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு வரிசைஎண் 2-ல் கொடுத்துள்ள Day Night Marketing சேல்ஸ் & சர்வீஸ் திருவாரூர் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.4458/2019/எச்1

தீர்மான எண்.131
அனுமதிக்கப்பட்டது
.

---

31.12.2019

பொருள்.4

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுமேலாண்மை .2016 அபாயகரமான கழிவுகள் (HAzardous waste) உரிய முறையில் சேகரித்து அழித்திட Incinerator - 2 எண்ணிக்கையில் வாங்கிட செலவினம் மேற்கொள்ள நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மானஎண் 116 நாள்.31.10.2019 2 எண்ணிக்கையில் Incinerator சப்ளை செய்திட விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு 2 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின்பெயர் | மின்கலம்விலைவிபரம் |
|---|---|---|
| 1 | VAMBSK FABS புதூர்ரோடு கோவில் மேடு கிழக்கு வெள்ளந்திபாளையம் கோயம் புத்தூர்-641025 (1Incinerator விலை) | ரூ.47200/- |
| 2 | D'ENGINEERINGSS 13-ஏ பழனியப்பா நகர் சௌரிபாளையம் கோயம்புத்தூர் (1Incinerator விலை) | ரூ.36344/- |

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு வரிசை எண் 2ல் கொடுத்துள்ள D'ENGINEERINGSS என்ற நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.3578/2019/எச்1

தீர்மான எண்.132
அனுமதிக்கப்பட்டது
.

---

31.12.2019

பொருள்.5

இந்நகராட்சியில் மக்கள் தொகை 2011ன்படி 58301 ஆகும் .எனவே இந்நகராட்சி பகுதிகளிலுள்ள இயற்கை இடர்பாடுகளினால் ஏற்பட்ட பள்ளங்களால் சாலைகள் மிகவும் பழுதடைந்தும் போக்குவரத்துக்கு இடையூராகவும் உள்ளது. மேலும் பொது மக்களிடமிருந்து சாலைகளை செப்பணிட்டு தருமாறு புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி சாலைகளை புனரமைப்பு செய்வதற்கு 14வது மத்திய நிதிக்குழுமானியம் 2019-20ன் கீழ் 50

தீர்மான எண்.133
அனுமதிக்கப்பட்டது
.

விழுக்காடு தொகையாகரூ.188.51 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இயற்கை இடர்பாடுகளினால் தற்பொழுது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கீழ்கண்ட சாலைகள் தேர்வு செய்து உரியமதிப்பீட்டில் திட்ட கருத்துருக்கள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிதி ஆதார விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 14வது மத்திய நிதிகுழு மானியம்-2019-20 | ரூ.188.51 |
| 2 | நகராட்சி பங்களிப்பு தொகை | ரூ.8.49 |
| | மொத்தம் | ரூ.197.00 |

| வ.எண் | வார்டு எண் | தேர்வு செய்யப்பட்ட பணிகளின் விபரம் | சாலையின் நீளம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 14,13 | சன்னதிதெரு, நடவாகன் மற்றும் விட்டலவாசல் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 460 | 25.00 |
| 2 | 4,13 | சம்பந்தமூர்த்திபிள்ளையார்கோவில்தெரு மற்றும் வடக்கு மடவளாகம் தார்சாலை அமைக்கும் பணி | 535 | 25.00 |
| 3 | 18,17 | சபாபதிதெரு மற்றும் பெருமாள் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும்பணி | 570 | 25.00 |
| 4 | 21 | இராணுவ நகரில் தார்சாலை அமைக்கும் பணி | 310 | 25.00 |
| 5 | 5,4 | அரசன்குளத்தெரு மற்றும் கம்பர்தெருவில் தார்சாலை அமைக்கும்பணி | 350 | 25.00 |
| 6 | 15 | திருமஞ்சன வீதிதார் சாலை அமைக்கும் பணி | 640 | 25.00 |
| 7 | 14 | திருமஞ்சனவீதி (தெற்கு கோபுரவாசல்) மற்றும் மானந்தியார் தெருதார் சாலை அமைக்கும்பணி | 380 | 22.00 |
| 8 | 9,12 | சூபி நகர் மற்றும் அப்பர் தெருவில் தார்சாலைஅமைக்கும்பணி | 525 | 25.00 |
| | | மொத்தம் | 3770 | 197.00 |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒதுக்கப்பட்ட மானியதொகை போக மீதமுள்ள தொகைக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிவழங்கலாம்.

ந.க.எண்.3666/2019/இ1

---

31.12.2019

பொருள்.6

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ்கழிவு நீர்சுத்திகரிப்பு நிலையமானது கேக்கரையில் 01.06.2015 முதல் 31.05.2020 வரை ஐந்து வருடங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வையில் M/s. Hindustan Dorr-Oliver Limited, சென்னை ஒப்பந்ததாரர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பராமரிப்பு பணியானது ஒப்பந்தஷரத்துகளின்படி பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது.மேற்கண்ட ஒப்பந்த பணியின் காலம் முடிவுறும் நிலை உள்ளதால் மேலும் கால நீட்டிப்பு செய்வது குறித்தும் மற்றும் புதியதாக ஒப்பந்தப்புள்ளிகளின் மூலம் பணியினை தொடர வேண்டி நிலையினைகருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் தக்க தெளிவுரை பெறமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மன்றப்பொருள் ஒப்புதலுக்குவைக்கப்படுகிறது.

தீர்மான எண்.134
அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr><td></td><td>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படிபணிக்குண்டான செலவினத்தை பாதாளச்சாக்கடை திட்டநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.12.2019</td><td>பொருள்.7<br>திருவாரூர் நகராட்சி வார்டு எண்.19ல் பனகல் சாலையில் உள்ள தாழை மு.கருணாநிதி வணிக வளாகத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட்ட இடமானது தற்போது காலியிடமாக உள்ளதால் ஆக்கிரமிப்பினை தடுக்கும் பொருட்டு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக காலியிடத்தினை சுற்றிசுற்றுச் சுவர் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேசமதிப்பீடுரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான உத்தேசசெலவினத்தை நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>தீர்மான எண்.135<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td></tr>
<tr><td>31.12.2019</td><td>பொருள்.8<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட நெய்விளக்கு தோப்பு பகுதியில் அமைந்துள்ள சுடுகாடு பகுதியில் சுற்றுச்சுவர் பழுதடைந்து உள்ளதால் அதனை சீர்செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>தீர்மான எண்.136<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td></tr>
<tr><td>31.12.2019</td><td>பொருள்.9<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருவாரூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.மு.கருணாநிதி அவர்களால் 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்பணிகள் தேர்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அப்பணிகளில் கீழ்கண்ட இரண்டு பணிகள் மட்டும் பணி மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால் அதனை நீக்கம் செய்துதர வேண்டுமாய் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வார் டு எண்</th><th>பணியின் விபரம்</th><th>நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கடிதம்</th><th>ரத்துச்செய்வதற்கான காரணங்கள்</th></tr>
<tr><td>1</td><td>24</td><td>பெரியார் தெரு குருகுளத்தில் {தடுப்புச்சுவர் கட்டுதல் மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் (2016-17)</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்.3655/2016/அ5 நாள்.15.04.2017</td><td>மேற்படி பணியில் - குருகுளத்தில் நீர் முழுமையாக உள்ளதினால் தடுப்புச்சுவர் கட்டும் பணிமேற்கொள்ள இயலவில்லை என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.</td></tr>
<tr><td>2</td><td>4</td><td>கம்பர்தெரு வில் கழிப்பறைகட்டும் பணி மதிப்பீடு ரூ.5.00 லட்சம் (2017-18)</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.6848/2017/அ5 நாள்.02.04.2018</td><td>ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.</td></tr>
</table>
அலுவலககுறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>தீர்மான எண்.137<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td></tr>
</table>

31.12.2019

பொருள்.10

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நீர்த்த குளோரின் திரவம் விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.110 நாள்.30.09.2019ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து 10.12.2019ல் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி நிறுவனங்களின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S.M.R.Dijes and Chemicals, No.25, R.K.V.Nagar, Erode-03 | 9,00,000/- | 0.42% சத விகிதம் மதிப்பீட்டை விடகுறைவு |
| 2 | M/S. Rakshita Chemicals and Tradors, No.09, K.A.S.Nagar,Tundal, Erode-12 | | 0.75% சதவிகிதம் மதிப்பீட்டை விட மிகக்குறைவு. |

மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டினை விட மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ். ரக்ஷிதா கெமிக்கல்ஸ் அன்டு டிரேடர்ஸ், ஈரோடு அவர்களின் மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்டஒப்பந்தப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட மிகக்குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதனை மன்றம்ஏற்கலாம்.

தீர்மான எண்.138
அனுமதிக்கப்பட்டது.

இடம் : திருவாரூர்
நாள் : 31.12.2019

ஒம்/- ந.சங்கரன்,
ஆணையர்/தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.